அகண்ட பாரத

தேவி

கட்க மாலா
மண்டலி

அன்றாட வழிபாட்டு

நூதன தோத்திரத்திரட்டு

தொகுத்தவர்

த்ரிசக்திபாததூளி **T.V. கல்யாண்**

எண் 10, ராமகிருஷ்ணா தெரு, நேரு நகர்,
ரோம்பேட்டை, சென்னை–44.
போன் : (044) 2231111

பிரசுரிப்பாளர்

த்ரிசக்தி பதிப்பகம்

விலை ரூ. 10/- ஊக்குவிப்பு விலை ரூ. 5/-

விலைகொடுத்து வாங்க இயலாதோர்க்கு
இலவச பிரதியாக வழங்கப்படும்

தவத்திரு ப்ரணவானந்த ஸ்வாமிகள்

ஆசியுரை



த்ரிசக்தி பாததூளி **T.V. கல்யாண்** எனும் 80 வயது இளைஞரை சுமார் 10 வருடகாலம் நெருக்கமாய் அறிவேன். அவரது எழுத்துக்கள் என்னை ஈர்த்தன. எண்ணங்கள் என்னைக் கவர்ந்தன. கருத்துக்கள் என்னைக் கரைத்தன, ஸமூஹத்தின் மீதான அவரது நோக்கு, போக்கு, அக்கரை, கவலை என்னை அவருடன் இறுக்கமாகப் பிணைக்க ஆரம்பித்தன. ஒரு ஸன்யாஸி, மஹான், மக்கள் தலைவர், மாமேதை போன்ற தகுதிகள் கைவந்த இவர் தன்னை ஒரு பொருட்டாகவே கணிக்காமல் மிக எளிமையாய் ஒரு கர்மயோகியாய் செயலாற்றிவருவது எவரையும் இவர்பால் ஈர்த்து சமுதாயத்திற்குச் சேவைசெய்யத் தூண்டும் என்பதற்கு என் பங்கேற்பே சான்று.

வாழ்க அவரது ஆர்வம்! வெல்க அவரது முற்றுகை!

வந்தே மாதரம்!

ஸத்யமேவ ஜயதே!

நாராயணஸ்ம்ருதி:


ஸ்ரீ வித்யா மஹாஸௌபாக்ய பராம்பிகா பீடம்

ஸ்ரீ லலிதாச்ரமம் ட்ரஸ்ட், அந்த நல்லூர்,

திருச்சி – 639 101.

I Welcome donations from Noble-souls for my sacred War through prayers to release Humanity from the heinous clutches of the present Times. - T.V. KALYAN -

உ



ஓம் குருஸ்வரூபிண்யை நம: 1/-5

சகோதரத்துவம் - சமத்துவம் - சமரசம் - சமாதானம்

இவையே இயற்கையின் இயல்பு. எந்த சிந்தாந்தத்தை எடுத்துக் கொண்டாலும் ஆதியில் தோன்றிய ஆணும் பெண்ணும் ஈன்றெடுத்த மக்களால்தான் மனித சமுதாயம் விரிவடைந்து பெருகிவருகிறது எனும் பேருண்மை தெளிவாகிறது.

எனவே மனித சமுதாயமே ஒரு கூட்டுக்குடும்பம

உலகமே அதன் வீடு என்பது மறுக்கமுடியாத அடிப்படை. ஆகவே யாவரும் சகோதரர்கள் - சமபங்காளிகள்.

இந்த உலகமோ மனிதன் தோற்றுவித்ததல்ல. மனிதன் தோன்றுவதற்கு முன்பே எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யவல்லதாக இயற்கையால் சமைக்கப்பட்டது.

மனிதனுக்கான தேவை எதையும் உருப்படியான உழைப்பால் அடைந்து கொள்ளமுடியும். அடைந்து கொண்டு மகிழ்ச்சி பொங்க வாழலாம்.

சமத்துவத்தால், சமரசத்தால் அவரவர் திறனுக்கேற்றபடி உழைத்து தேவைக்கேற்றவாறு வாழ்ந்து கொள்வதே இயற்கை வகுத்துள்ள கடமையும், உரிமையும். இந்தக் கடமையும், உரிமையும் சமரசப்பாங்கிலே பிணைந்து பரந்து நடை பெற்றால் தான் சமாதானம் சிதையாமல் நிலைக்கும்.

சாந்திர...

உ

புதிய வழிபாட்டுத் தொகுப்பு

அறிமுகம்

இறையுணர்வு நமது நடப்பில் முதலிடம் பெற்றால்தான் வாழ்க்கை இன்பமயமாகவும் இன்னலற்றதாகவும் அமையும். இது என்றும் எங்கும் மாறுபடாத நியதி.

இம்மாபெரும் அடிப்படையை நன்கு வேறூன்றச் செய்து முழுப்பயனை அடைய வைக்கவேண்டியவர் பெற்றோர்.

பிற்காலத்தில் பாசத்தோடு பராமரிக்கப்பெறும் பெற்றோர்தான் இக்கடமையை முழுமையாய் நிறைவேற்றியவரென அடையாளம் காணலாம்.

மற்றவர்கள் பெற்றுப்போட்டுவிட்டு எவ்வெவ்வாறோ வாழ்ந்து முடிக்கும் விலங்கியல்பினராவர்.

இன்று இவ்விலங்கியல்பினர் தொகை மிகமிக அதிகமாகியுள்ளது. பரிசீலித்துப் பரிகாரம் காண வேண்டிய கட்டத்தை எட்டிவிட்டோம். ஒவ்வொருவரும் உடனே பொறுப்போடு செயல்பட ஆரம்பிக்க வேண்டும். அதற்கு இறைச்சக்தியைச் சரணடைய வேண்டும். எளிதாய் வெற்றியடையலாம்.

பண்டைய குருகுலப் பாடம்

மாதாவும் பிதாவும்
முன்னறி தெய்வம்

இன்றைய வியாபாரக் கல்வி விளைவு

மாதா பிதா கதி
முதியோர் இல்லம்!
(அனாதை இல்லம் ?)

இறைவன் தந்துள்ள உலகத்தில் யாவும் உள்ளன. தேவைக்கேற்ப அடைந்து கொள்ள வாய்ப்புக்களும் விரிவாகவே உள்ளன. அடைவதற்கான பொறுப்பைத் தான் ஒழுக்கம் புண்படாமல் சரிவர நிறைவேற்ற வேண்டும். பொறுப்பை நிறைவேற்றாமல் வாழ நினைப்பது திருட்டுச் செயல்.

பொறுப்பு என்பது ஒரு சுமையே அல்ல. மிகச் சுலபமாக, மகிழ்ச்சியை மட்டுமே அளிக்க வல்லது தான், பொறுப்பைச் சரிவர நிறைவேற்றும் செயல்.

பொறுப்பு உடல் போன்றது.

ஒழுக்கம் உடலில் உயிர் போன்றது.

<u>பொறுப்பின் அங்கங்கள் (உறுப்புக்கள்) ஆவன:</u>

- உண்மையையே கடைப்பிடித்தல்
- திறனுக்குரிய வேலையைச் செய்தல்;
- அடுத்தவருடைய நல்ல அம்சங்களைப் பின்பற்றுதல்;

- தேவைக்கு மீறி ஆசைப்படாமலிருத்தல்;
- பிறர் எவ்வாறு நம்மிடம் பரிவு காட்டவேண்டுமென்று எதிர்பார்க்கிறோமோ அதே அளவில் பிறரிடம் நாமும் பரிவுடன் பழகுதல்;
- பெரியோர் சொல்படி நடத்தல்;
- பிறருக்குக் கேடு செய்யாமலும் நினையாமலும் இருத்தல்
- தீயவற்றை அறவே விலக்குதல்;
- நல்லனவற்றை எங்கும் எப்போதும் எதிலேயுட் நிலைபெறச் செய்து பாதுகாத்தல்;
- அமைதியாகவே வாழ நாட்டம் கொள்ளுதல்;
- இயன்றவரை அடுத்தவர்க்குதவுதல்;
- பகட்டான வாழ்வை வெறுத்து எளிமையாய் வாழ்வதில் பெருமிதம் கொள்ளுதல்;
- சமுதாயத்தை ஒரே குடும்பமாய்ப் போற்றி ஒழுகுதல்;
- இறையிடம் நீங்கா நம்பிக்கை வைத்தல்;

மேற்குறிப்பிட்டவாறு முழுப்பொறுப்புடன் ஒவ்வொருவரும் இயங்குவது எனும் நிலை மலருமானால் வாழ்க்கையில் துன்பம் எவ்வாறு இடம்பெற இயலும் ?

எனவே ஒவ்வொருவரும் முதலில் இறைச்சக்தியை நிரம்ப அடைவதற்குப் பாடுபடத் துவங்கவேண்டும்.

நமது அயரா முயற்சியின் மூலம் அந்த "இறைச்சக்தி" நம்மில் பெருகப்பெருக அவரவர் வாழ்க்கையில் சுவையும் இன்பமும் கூடிக்கொண்டே இருக்கும்.

இப்பேற்றினை எளிதாய் சாதித்துக் கொள்ளவே இந்நூதன ஆனால் தொன்மையான தோத்திரத்திரட்டு வெளிவந்துள்ளது.

யாவரும் எவ்விதத் தயக்கமுமின்றி பின்பற்றிப் பயனடையலாம்.

இத்திரட்டில் காணும் தோத்திரங்களும், அதன் நூதன வடிவமைப்பின் மூலங்களும் பாரம்பர்ய மரபு பிறழாத புனிதம் தாங்கியவை. இன்றைய கலிதோஷத்தை வேரறுத்து ஸகல ஸௌக்கியங்களையும் ஸமஸ்த ஸௌபாக்கியங்களையும் வாரி வழங்க வல்லது.

நம்பிக்கையுடன் ஈடுபடுங்கள்

பேறு பதினாறும் பெற்றுப் பெருவாழ்வை ஈட்டிக் கொள்ளுங்கள்.

இத்தோத்திரத் தொகுப்பின் விரிவான பதிப்பில் இணைத்துள்ள விளக்கங்களை ஆழ்ந்து படித்தால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். உத்திரவாதமான எதிர்காலத்தைப் பற்றி அசைக்கமுடியாத நம்பிக்கையேற்படும். இது சத்தியம். வாரீர்! செயல்பட்டுச் செம்மையடைவீர்!

உடல், உடை, உள்ளம் இவற்றைத் தூய்மையாய் ஆக்கிக்கொண்டு அவரவர் வீட்டுக்குரிய மரபுச் சின்னங்களையணிந்து, இயன்றவரை மனதை அலையவிடாமல் கட்டுப்படுத்தி, தோத்திரங்களை

நிறுத்தி நிதானமாய் ஓதுங்கள். நாற்பத்தியெட்டு நாட்களில் அவரவர் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை எட்ட முடியும்.

இறைமேல் ஆணை!

உச்சரிப்பு வழிகாட்டி

(தோத்திர எழுத்துக்களின் அடியில் எண்கள் அச்சிடப்பட்டுள்ளன. அந்தந்த எண்ணைக் கொண்ட எழுத்துக்கள் எவ்வாறு உச்சரிக்கப்பட வேண்டும் என எடுத்துக்காட்ட முதலில் எண் கொண்ட எழுத்தையும், அதன் எதிரே உள்ள வார்த்தையில் அதன் உச்சரிப்பைச் சுட்டிக்காட்டும் எழுத்தை பிராக்கெட்டினுள் அடையாளப்படுத்தப் பட்டுள்ளதைக் கவனித்துப் பழகிக் கொள்ளுங்கள்)

எண் இடப்படாத எழுத்தை அதன் இயல்பான உச்சரிப்பாய்க் கொள்க.

எழுத்து – உச்சரிக்க வேண்டிய விதம்

க – பக்(க)ம்

க$_2$ – ப(க்க)ம்

க$_3$ – சிங்(கம்)

க$_4$ – மென்மையான (க்க) ஆக உச்சரிக்க

ச – மச்(ச)ம்

ச$_2$ – ம(ச்ச)ம்

ச5 – (ச)ந்தை,

ஜ1 – பு(ஜ)ம்

ஜ2 – (ஜ்ஜ) என உச்சரிக்க.

ட – கட்(ட)ணம்

ட2 – க(ட்ட)ணம்

ட3 – கட்டி(ட)ம்

ட4 – மென்மையான (ட்ட) ஆக உச்சரிக்க

த – மத்(த)ளம்

த2 – ம(த்த)ளம்

த3 – பந்(த)யம்

த4 – மென்மையான (த்த) ஆக உச்சரிக்க

ப – கப்(ப)ல்

ப2 – க(ப்ப)ல்

ப3 – கம்(ப)ம்

ப4 – மென்மையான (ப்ப) என உச்சரிக்க

ரு7 – ப(ரு)வம்

ரூ8 – மேலே உள்ள (ரு) உச்சரிப்பையே நீட்டுதல்

உ

ஸ்ரீமாத்ரேநம:

காப்பு

கும் குருப்யோ நம:
கீம் கணபதயே நம:
தும் துர்காயை நம:
வம் வடுகபைரவாய நம:
யாம் யோகிநீப்யோ நம:
க்ஷம் க்ஷேத்ரபாலாய நம:
ஸம் ஸமஸ்த தேவதாப்யோ நம:



குருவணக்கம்

உள்ளுறை ஒளியாய் ஓயாத்துணையாய்
உண்மையை ஒலித்து உரமாய் நடத்தும்
உன்உரை சார்ந்தே என்செயல் ஒழுக
உன்னடி சேர்ந்தேன் தஞ்சம் குருவே.



கணபதி துதி

குறைபோக்கித் தடைநீக்கி
குணநலனெல்லாம் தேக்கி
இறையருள் இசைவாய்க் கூட்டி
இன்பம்சேர்க்கக் கணபதியே போற்றி!

அறிவுத்தெய்வம் ஆறுமுகப்பா

அறிவுக்கறிவு நீ
அறம் பொருள் இன்பம் நீ
அறமும் அறிவும் இணைந்த
அருஞ்செயலாற்ற பணி!

நவ கோள் திரட்டு

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்
வியாழன் வெள்ளி சனி ராகு கேது
ஞால நலன்காக்கும் நவ கோள் தேவே
நயந்து நின்றோம் நும் அருள் வேண்டி!

முதலாவதாக ஷோடச லக்ஷ்மீ தோத்திரம். இவண் பதினாறு இலக்குமிகள் அவரவர் நாராயணாம்சத்துடன் முறைப்படி இணைத்துப் பிரார்த்தித்துத் துதிக்கப்படு கின்றனர். நம் தமிழ் மரபு அறைகூவுவது பேறு பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்தலாம். அதாவது பதினாறு இலக்குமிகள். இதனை சக்திச் செல்வர்கள் கவிகாள மேகமும், அபிராமிபட்டரும் அறுதியிட்டுள்ளனர்.

ஸ்ரீரஸ்து சுபமஸ்து ஆரோக்யமஸ்து



ஷோடச லக்ஷ்மி தோத்திரம்



ஸௌபாக்யலக்ஷ்மி

ஊழ்வினை செய்வினை சார்ந்துருவாகுந்நல்
ஊழ்வினை செறியும் நன்றே ஆற்ற
வாழ்வு நலம்பெற வரந்தரவேணும்
கேசவப்ரிய ஸெபாக்யலக்ஷ்மீ

வித்யாலக்ஷ்மி

கல்விக் கடல்கரை காண்பது ஞானம்
உள்விதை உணர்ந்தே உரு ஒளிமேவும்
நல்வழிக் கல்வி நிறைந்திடச் செய்வாய்
நாராயணப்ரிய வித்யாலக்ஷ்மீ

மேதாலக்ஷ்மி

அறிவுச்சுடர் அறம் சார்ந்தே விளங்கிச்
செறிவுடனே பிறர் கண்ணீர் துடைத்துத்
தரமாய் வாழத் தருவாய் வரமே
மாதவப்ரிய மேதாலக்ஷ்மீ

தனலக்ஷ்மி

தனமாம் அணிமணி பொன்னும் வெள்ளியும்
கனமாய் மனைமாடு கன்று வாஹனம்
இனமாய் எமக்குற வரந்தர வேணும்
கோவிந்தப்ரிய மாதனலக்ஷ்மீ

ஸௌந்தர்யலக்ஷ்மி

அழகே நாணும் எழில் தரும் ஆற்றலுன்
விழிகளின் வீச்சில் களிநடம் புரியும்
அழகின் முழுமை பரிவாய் தருவாய்
விஷ்ணுப்ரிய மாஸௌந்தர்யலக்ஷ்மீ

ஆரோக்யலக்ஷ்மி

நோயின்மை செல்வத்துள் சீர்மிகுஞ்செல்வம்
தாயுன்மைவிழி தண்மையில் ஒளிரும்
நோயற்ற மாவீர்ய வாழ்வே தருவாய்
மதுஸூதனப்ரிய ஆரோக்யலக்ஷ்மீ

கீர்த்திலக்ஷ்மி

புகழ் தரும் போதையது புரையோடிப் போகாமல்
இகழேதும் தீண்டாத மங்காப் புகழ் சேர்த்து
மகிழ்வாய் நீள்காலம் மறவாப் புகழ் தருவாய்
த்ரிவிக்ரம ப்ரியே கீர்த்திலக்ஷ்மீ

ஸந்தானலக்ஷ்மி

நன்மக்கள் கலிதீர்க்கும் குலம்காக்கும் நலமோடு
பொன்மக்களெனவே பெருமையாய் வாய்த்திட
மண்மக்கள்தனை நீ வாழ்த்தியருள் தேவீ
வாமனப்ரியே ஸந்தானலக்ஷ்மீ

புஷ்டிலக்ஷ்மி

இளமையெனும் தேனூறும் நற்கனிச்சோலை
வளமையாய் வனப்புடன் ஒளிவீசிச் செழித்து
உளமாற உனைப்போற்றும் நன்மதியை தருவாய்
ஸ்ரீதரப்ரியே மாபுஷ்டிலக்ஷ்மீ

தான்யலக்ஷ்மி

நெல்லும் நவநலனும் நிறைந்தோங்கித் தழைக்க
அல்லும் பகலும் அயராதுழைக்கும் நன்மக்கள்
நல்லதோர் நிறைவான வாழ்வுபெற வேண்டும்
ருஷிகேசப்ரியே ஸ்ரீ தான்யலக்ஷ்மி

வீரலக்ஷ்மி

வலிமையாம் உடல்வலி நெஞ்சுரம் நேர்மை
எளிமை தயை பண்பு சேர்ந்தவோர் வீரமாய்
வலியோங்கி வன்முறை வீழவேவரம் தா
பத்மநாபப்ரியே வீரலக்ஷ்மீ

தைர்யலக்ஷ்மி

துணிவுக்குத் துணையாகும் அறம் நெறிதெளிவு
பணிவுங்கனிவுமதில் பழுதிலா பலம் சேர்க்க
பணிவோம் உனைப்பிரியோம் எமை நீங்காதிரு
தாயே
தாமோதரப்ரியே தைர்யலக்ஷ்மீ

விஜயலக்ஷ்மி

வெற்றிவேண்டும் பகை தோன்றா நலன்வேண்டும்
எற்றிசை செல்லினும் ஏற்றமே வேண்டும்
பற்றிடும் பதமலர் துணைநிற்க வேண்டும்
அநிருத்தப்ரியே விஜயலக்ஷ்மீ

ஆயுர்லக்ஷ்மி

வாழ்நாள நீட்டிவரம் கேட்கும் எம்வாழ்வில்
ஊழ்நாள் குறுக்கிட்டு குறுகாத நலமோடு
பாழ்நாளே இன்றி பார்த்தருள வேணும்
ப்ரத்யும்னப்ரியே ஆயுர்லக்ஷ்மீ

போகலக்ஷ்மி

நுகர்ச்சிகள்யாவும் சுவையாய் முழுமதியாய்
இகழ்ச்சியே இன்றி இன்பமே சுரப்பதாய்
மகிழ்ச்சியேமேவும் மாண்புடன்தருவாய்
ஸங்கர்ஷணப்ரியே போகலக்ஷ்மி

சாந்திலக்ஷ்மி

பொறுமையினை சிறுமையென எண்ணாத மனமும்
வறுமையிலும் செம்மையதை காணுமோர் தரமும்
உரிமையாய் எமக்காக்கி உரம் சேர்க்க வேணும்
வாஸுதேவப்ரியே சாந்திலக்ஷ்மி

ஆதிலக்ஷ்மி

முழுமுதல் நீயே மதிமுக மாயே
அயன் அரி அரன் இணை யாவர்க்கும் தாயே
மழுமழை மண் கால் வெளியாய் மலர்ந்தே
வளர்பிறை தேய்பிறை வடிவதை ஏற்றாய்
விழியாலண்ட மனைத்தும் சமைத்தாய்
ஆக்கி ஆட்டி அழித்தே மகிழ்ந்திடவே
அழியாநிதியே முழுமை வடிவே
பேறுபதினாறும் அளிப்பாய் ஆதிலக்ஷ்மி

—த்ரிசக்தி பாததூளி **T.V. கல்யாண்**




கட்கமாலா

(நம்முள் இறைச்சக்தியை
வளர்த்துக்கொண்டே போகும்)

அஸ்ய ஸ்ரீ தேவி கட்கமாலா ஸ்தோத்ர மஹா மந்த்ரஸ்ய
3 233
ஆதிநாத ஸதாசிவ ருஷயே நம:
3 2 3 5 7
பங்க்திம் சந்தஸே நம:
2 3
பரா ஆதிசக்தி தேவதாயை நம:
3 5 3
ஐம்–பீஜம், க்லீம்–சக்தி: ஸௌ– கீலகம்
3 5
ஸர்வ ஸித்தௌ விநியோக:
3 4 3
ஹ்ராம் அங்குஷ்டாப்யாம் நம:
3 4
ஹ்ரீம் தர்ஜனிப்யாம் நம:
4
ஹ்ரூம் மத்யமாப்யாம் நம:
4
ஹ்ரைம் அனாமிகாப்யாம் நம:
4
ஹ்ரௌம் கனிஷ்டிகாப்யாம் நம:
4
ஹ்ர: கரதலகரப்ருஷ்டாப்யாம் நம:
4
ஹ்ராம் ஹ்ருதயாய நம:
3
ஹ்ரீம் சிரஸேஸ்வா:
5
ஹ்ரூம் சிகாயை வஷட்
5 2
ஹ்ரைம் கவசாய ஹூம்





ஹ்ரௌம் நேத்ரத்ரயாய வௌஷட்

ஹ்ர: அஸ்த்ராய பட்

பூர்ப் வஸ்ஸுவரோம் இதிதிக்பந்த:

(த்யானம்)

ஸதா ஷோடச வர்ஷாட்யௌ கலாஷோடச மண்டிதௌ

த்ரிபஞ்ச ரூப விபவௌ த்ரிபஞ்ச வர்ண மந்திரௌ

ஆனந்தோல்லாஸ மஹிதௌ பஞ்ச ப்ரம்ஹாஸன ஸ்திதௌ

ஜகத: பிதரௌ வந்தே ஸ்ரீ காமேச்வர தம்பதீ

(பஞ்ச பூஜை)

லம் – ப்ருத்வ்யாத்மிகாயை கந்தம்கல்பயாமி நம:

ஹம் – ஆகாசாத்மிகாயை புஷ்பம் கல்பயாமி நம:

யம் – வாயவ்யாத்மிகாயை தூபம் கல்பயாமி நம:

ரம் – அக்ன்யாத்மிகாயை தீபம் கல்பயாமி நம:

வம் – அம்ருதாத்மிகாயை அம்ருத மஹா

நைவேத்யம் கல்பயாமி நம:

ஸம் – ஸர்வாத்மிகாயை தாம்பூலாதி ஸமஸ்தோப

சாரான் கல்பயாமி நம:

ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் ஓம்

நமஸ்த்ரிபுரஸுந்தரி
3

ஹ்ருதயதேவி
7 3

சிரோதேவி
5 3

சிகாதேவி
5 2 3

கவசதேவி
3

நேத்ரதேவி
3

அஸ்த்ரதேவி
3

காமேச்வரி
5

பகமாலினி
4 3

நித்யக்லின்னே

பேருண்டே
4

வன்ஹிவாஸினி


மஹாவஜ்ரேச்வரி
5

சிவாதூதி
3

த்வரிதே

குலஸுந்தரி
3

நித்யே



நீலபதாகே

விஜயே

ஸர்வமங்களே
3
ஜ்வாலாமாலினி

சித்ரே


மஹாநித்யே

பரமேச்வரபரமேச்வரி
5 5
மித்ரீசமயி
5
ஷஷ்டீசமயி
25
உட்டீசமயி
335
சர்யாநாதமயி
2
லோபாமுத்ராமயி
3
அகஸ்த்யமயி

காலதாபனமயி

தர்மாசாரமயி
4
முக்த கேசீச்வரமயி
55
தீபகலாநாதமயி
3 2
விஷ்ணுதேவமயி
3


குருமண்டல



தேவிகள்

ப்ரபாகரதேவமயி
4 3
தேஜோதேவ்மயி
3
மனோஜதேவமயி
3
கல்யாணதேவமயி
3
ரத்னதேவமயி
3
வாஸுதேவமயி
3
ஸ்ரீராமானந்தமயி
3
அணிமாஸித்தே
3 4
லகிமாஸித்தே
3 4
மஹிமாஸித்தே
3 4
ஈசித்வஸித்தே
5 3 4
வசித்வஸித்தே
5 3 4
ப்ராகாம்யஸித்தே
3 4
புக்திஸித்தே
4 3 4
இச்சாஸித்தே
2 3 4
ப்ராப்திஸித்தே
3 4
ஸர்வகாமஸித்தே
3 4
ப்ராம்ஹி

த்ரைலோக்ய



மாஹேச்வரி
5

கெளமாரி

வைஷ்ணவி

வாராஹி

மாஹேந்த்ரி
3

சாமுண்டே
3

மஹாலக்ஷ்மி

ஸர்வஸம்க்ஷோபிணி
4

ஸர்வவித்ராவிணி
3

ஸர்வாகர்ஷிணி

ஸர்வவசங்கரி
5

ஸர்வோன்மாதினி
3

ஸர்வமஹாங்குசே
5

ஸர்வகேசரி
2

ஸர்வபீஜே
3

ஸர்வயோனே

ஸர்வத்ரிகண்டே
2 3



த்ரைலோக்யமோஹன சக்ரஸ்வாமினி

ப்ரகடயோகினி
3

காமாகர்ஷணி

புத்த்யாகர்ஷணி
3 3 4

அஹங்காராகர்ஷணி

சப்தாகர்ஷணி
5 3 3

ஸ்பர்சாகர்ஷணி
5

ரூபாகர்ஷணி

ரஸாகர்ஷணி

கந்தாகர்ஷணி
3 4

சித்தாகர்ஷணி

தைர்யாகர்ஷணி
4

ஸ்ம்ருத்யாகர்ஷணி

நாமாகர்ஷணி

பீஜாகர்ஷணி
3


ஆத்மாகர்ஷணி

அம்ருதாகர்ஷணி

சரீராகர்ஷணி
5

ஸர்வாசாபரிபூரகசக்ரஸ்வாமினி
5

ஸர்வாசாபரிபூரக




சக்ரம்

குப்தயோகினி
3 3
அனங்ககுஸுமே
3
அனங்கமேகலே
3 2
அனங்கமதனே
3 3
அனங்கமதனாதுரே
3 3
அனங்கரேகே
3 2
அனங்கவேகினி
3 3
அனங்காங்குசே
3 5
அனங்கமாலினி
3
ஸர்வஸம்க்ஷோபணசக்ரஸ்வாமினி
4
குப்ததரயோகினி
3 3
ஸர்வஸம்க்ஷோபிணி
4
ஸர்வவித்ராவிணி
3
ஸர்வாகர்ஷிணி

ஸர்வாஹ்லாதினி
3
ஸர்வஸம்மோஹினி


ஸர்வஸ்தம்பினி
4
ஸர்வஜ்ரும்பிணி
4

ஸர்வ
ஸம்க்ஷோபண



சக்ரம்

ஸர்வ
ஸௌபாக்யதாயக



சக்ரம்

ஸர்வவசங்கரி
5
ஸர்வரஞ்ஜினி


ஸர்வோன்மாதினி
3
ஸர்வார்த்தஸாதினி
2 4
ஸர்வஸம்பத்திபூரணி

ஸர்வமந்த்ரமயி

ஸர்வத்வந்த்வக்ஷயங்கரி
3 3
ஸர்வஸௌபாக்யதாயக சக்ரஸ்வாமினி
4 3 3
ஸம்ப்ரதாயயோகினி
3 3
ஸர்வஸித்திப்ரதே
3 4 3
ஸர்வஸம்பத்ப்ரதே
3
ஸர்வப்ரியங்கரி

ஸர்வமங்களகாரிணி
3
ஸர்வகாமப்ரதே
3
ஸர்வது: கவிமோசினி
3 2
ஸர்வம்ருத்யுப்ரசமனி
5
ஸர்வவிக்னநிவாரிணி
4
ஸர்வாங்கஸுந்தரி
3 3

ஸர்வார்த்த
ஸாதக



சக்ரம்

ஸர்வஸௌபாக்யதாயினி
4 3 3
ஸர்வார்த்தஸாதகசக்ரஸ்வாமினி
2 4
குளோத்தீர்ணயோகினி
3
ஸர்வக்ஞே

ஸர்வசக்தே
5
ஸர்வைச்வர்யப்ரதே
5 3
ஸர்வஞானமயி


ஸர்வவ்யாதிவிநாசினி
4 5
ஸர்வாதாரஸ்வரூபே
4
ஸர்வபாபஹரே

ஸர்வானந்தமயி
3
ஸர்வரக்ஷாஸ்வரூபிணி

ஸர்வேப்ஸிதப்ரதே
3
ஸர்வரக்ஷாகரசக்ரஸ்வாமினி

நிகர்ப்பயோகினி
4 3
வசினி
5
காமேச்வரி
5
மோதினி
3

ஸர்வ
ரக்ஷாகரா



சக்ரம்

விமலே

அருணே


ஜயினி

ஸர்வேச்வரி
5
கௌளினி

ஸர்வரோகஹ்ரசக்ரஸ்வாமினி
3
ரஹஸ்யயோகினி
3
பாணினி
3
சாபினி

பாசினி
5
அங்குசினி
5
மஹாகாமேச்வரி
5
மஹாவஜ்ரேச்வரி
5
மஹாபகமாலினி
4 3
மஹாஸ்ரீஸுந்தரி
3
ஸர்வஸித்திப்ரதசக்ர ஸ்வாமினி
3 4 3
அதிரஹஸ்யயோகினி
3
ஸ்ரீ ஸ்ரீ மஹாபட்டாரிகே
4
ஸர்வானந்தமயசக்ரஸ்வாமினி
3
பராபரரஹஸ்யயோகினி
3


ஸர்வ ரோக ஹர



சக்ரம்


ஆயுதங்கள்

ஸர்வ
ஸித்திப்ரத



சக்ரம்

சர்வானந்தமய



சக்ரம்

த்ரிபுரே

த்ரிபுரேசி

த்ரிபுரஸுந்தரி

த்ரிபுரவாஸினி

த்ரிபுராஸ்ரீ

த்ரிபுரமாலினி

த்ரிபுராஸித்தே

த்ரிபுராம்பு

மஹாத்ரிபுஸுந்தரி

மஹாமஹேச்வரி

மஹா மஹாராக்ஞி

மஹா மஹாசக்தே

மஹாமஹாகுப்தே

மஹாமஹாஞப்தே

மஹாமஹாநந்தே

மஹாமஹாஸ்யந்தே

மஹாமஹாசயே

மஹாமஹாஸ்ரீசக்ரநகரஸம்ராக்ஞி

நமஸ்தே த்ரி: ஸ்வாஹா ஸ்ரீம் ஹ்ரீம் ஐம் ஓம்

சிவசக்தியம்சம்



இன்று நம் வாழ்வை முற்றுகையிட்டு ஆக்கிரமித்துள்ள தீயசக்திகள் அழிந்து நாடும் வீடும் சமூகமும் செழிப்புறும். அமைதி நிலைக்கும்.

ஸ்ரீமாத்ருகா பைரவ தசகம்

1. காக்க! காக்க! ப்ராஹ்மீ மாதா உடனான
அஸிதாங்க பைரவர் விரைந்து காக்க!
இன்றுலகில் எரிமலையாய்
மன்னுயிரை மாய்த்துவரும்
வன்முறைக் கலாசாரம் ஒழித்துக் காக்க!

2. காக்க! காக்க! மாஹேசீ மாதா உடனான
ருருமஹா பைரவர் பரிந்து காக்க
இன்றுலகில் கடலரிப்பென கபடமாய் நாட்டை நாடு
கவிழ்க்கும் சூழ்ச்சியதை போக்கி காக்க!

3. காக்க! காக்க! கௌமாரீ மாதா உடனான
சண்டமா பைரவர் சடுதியில் காக்க!
இன்றுலகில் கூற்றுவனாய் அபரிமித ஆயுதங்கள்
ஆர்த்தெழும் கேடுதனை வீழ்த்திக் காக்க!

4. காக்க! காக்க!வைஷ்ணவீ மாதா உடனான
க்ரோதமா பைரவர் துடுகிக் காக்க! (கடுகிக்)
இன்றுலகில் பேயாடும் லஞ்ச வஞ்ச வழிப்பறி
அடாவடி அத்தனையும் அடக்கிக் காக்க!

5. காக்க! காக்க! வாராஹீ மாதா உடனான
உன்மத்த பைரவர் உவந்து காக்க!

இன்றுலகில் பெருநோயாய் உயிர்குடிக்கும்
போதைப் பொருள்
பெருஞ்சந்தையதை தீய்த்துக் காக்க!

6. காக்க! காக்க! மாஹேந்த்ரீ மாதா உடனான
கபாலமாபைரவர் வேகமே காக்க!
இன்றுலகில் பெரும்புயலாய் வீசும் பொய்மாயமதன்
ஆதிக்கம் அதனை விரட்டிக் காக்க!

7. காக்க! காக்க! சாமுண்டமாதா உடனான
பீஷணமாபைரவர் வீறுடன் காக்க!
இன்றுலகில் தொடர்கேடாய் தாய்க்குலம்
எதிர்கொள்ளும்
அவலங்கள் யாவும் அழித்துக் காக்க!

8. காக்க! காக்க! மாலக்ஷ்மீ மாதா உடனான
ஸம்ஹார பைரவர் கனிந்து காக்க!
இன்றுலகில் நற்சூழல்தனை நஞ்சாக்கும் நாசம் செய்யும்
அறிவீனம் தன்னை நீக்கிக்காக்க!

9. காக்க! காக்க! வடுகபைரவீ உடனான
வடுகமாபைரவர் வலியக் காக்க!
இன்றுலகில் மனித இனம் போடுமிரட்டை வேடத்
தாழ்மையதை தகர்த்துக் காக்க!

10. காக்க! காக்க! ஆனந்த பைரவியுடன்
ஆனந்த பைரவர் அன்புடன் காக்க!
இன்றுலகில் அறமோங்கி யாவர்க்கும் சுபம்
எங்கும்
சாந்தியென மங்களமெலாம் தந்து காக்க!

சுபம்

–த்ரிசக்தி பாததூளி **T.V. கல்யாண்**

நவதுர்கா துதி



(சக்தியின் உக்ராம்சம்—காலங்காலமாய் தீயவற்றை ஒடுக்கி சமுதாயத்தை காத்து ரக்ஷித்து வரும் தொன்மைமிகு தோத்திரப் புதையல். இன்றைய நெருக்கடியில் உடன் கை கொடுக்கக் கூடிய அருமருந்து)

1. ஜயந்தீ மங்களா காளீ பத்ரகாளீ கபாலினீ
துர்கா க்ஷமா சிவா தாத்ரீ ஸ்வாஹா ஸ்வதா
நமோஸ்துதே
ரூபம் தேஹி ஜயம் தேஹி யசோதேஹி ரிபூன் ஜஹி
யாதேவி ஸர்வ பூதேஷு சக்திரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

2. ஞானினாமபி சேதாம்ஸி தேவி பகவதி ஹிஸா
பலாத் ஆக்ருஷ்ய மோஹாய மஹாமாயா ப்ரயச்சதி
ரூபம் தேஹி ஜயம் தேஹி யசோதேஹி ரிபூன் ஜஹி
யாதேவி ஸர்வ பூதேஷு ப்ராந்திரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

3. துர்கே ஸ்ம்ருதா ஹரஸி பீதிமசேஷ ஜந்தோ:
ஸ்வஸ்தை: ஸ்ம்ருதா மதிமதீவ சுபாம் ததாஸி
தாரித்ர்ய துக்கபயஹாரிணிகாத்வதன்யா
ஸர்வோபகாரகரணாய ஸதார்த்ரசித்தா
ரூபம் தேஹி ஜயம் தேஹி யசோதேஹி ரிபூன் ஜஹி
யாதேவி ஸர்வ பூதேஷு புத்திரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

4. ஸர்வ மங்கள மாங்கள்யே சிவே ஸர்வார்த்த ஸாதிகே
சரண்யே த்ரயம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே
ரூபம் தேஹி ஜயம் தேஹி யசோதேஹி ரிபூன் ஜஹி
யாதேவி ஸர்வ பூதேஷு ச்ரத்தாரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

5. சரணாகததீனார்த்த பரித்ராண பராயணே
ஸர்வஸ்யார்த்தி ஹரேதேவி நாராயணி நமோஸ்துதே
ரூபம் தேஹி ஜயம் தேஹி யசோதேஹி ரிபூன் ஜஹி
யாதேவி ஸர்வ பூதேஷு வ்ருத்திரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

6. ஸர்வஸ்வரூபே ஸர்வேசீ ஸர்வசக்தி ஸமன்விதே
பயேப்யஸ்த்ராஹிநோதேவி துர்கே தேவி நமோஸ்துதே
ரூபம் தேஹி ஜயம் தேஹி யசோதேஹி ரிபூன் ஜஹி
யாதேவி ஸர்வ பூதேஷு துஷ்டிரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

7. ரோகானசேஷானபஹம்ஸிதுஷ்டா
ருஷ்டாது காமான் ஸகலானபீஷ்டான்
த்வாமாச்ரிதானாம் நவிபந்நராணாம்
த்வாமாச்ரிதாஹ்யாச்ரயதாம் ப்ரயாந்தி
ரூபம் தேஹி ஜயம் தேஹி யசோதேஹி ரிபூன் ஜஹி
யாதேவி ஸர்வ பூதேஷு க்ஷமாரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

8. ஸர்வா பாதாப்ரசமனம் த்ரைலோக்யஸ்யாகிலேச்வரி
ஏவமேவத்வயாகார்யம் அஸ்மத்வைரி விநாசனம்
ரூபம் தேஹி ஜயம் தேஹி யசோதேஹி ரிபூன் ஜஹி
யாதேவி ஸர்வ பூதேஷு தயாரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

9. நமோதேவ்யை மஹாதேவ்யை சிவாயை ஸததம் நம:
நம: ப்ரக்ருத்யை பத்ராயை நியதா: ப்ரணதாஸ்மதாம்
ரூபம் தேஹி ஜயம் தேஹி யசோதேஹி ரிபூன் ஜஹி
யாதேவி ஸர்வ பூதேஷு மாத்ருரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

(தூபம்,தீபம், நைவேத்யம், கர்ப்பூரஹாரத்தி,
ப்ரதக்ஷிணம், நமஸ்காரம்)

ஸமர்ப்பணம்

ஏவம் ஸ்தோத்ரம் ஸர்வாணாம் ஸ்ரீ ஜகதம்பாப்ரீதிரஸ்து.

அன்று வெள்ளையருக்காக
எழுந்த போர்க்குரல்
இன்று மறுபடி
தேவையாகிவிட்டதே!



பொழுதெல்லாமெங்கள்
செல்வம் கொள்ளைபோகவோ –
நாங்கள் சாகவோ?
அழுது கொண்டிருப்போமோ
ஆண் பிள்ளைகள் அல்லமோ –
உயிர்வெல்லமோ?

– மகாகவி பாரதியார்

தேர்தல் காலத்தில்
கும்பிடைப் பெற்றுக்கொண்டு
வோட்டைப் போட்டுவிட்டு
பின்னர் ஐந்தாண்டு காலம்
அனாதையாய் அழுகிறோமே –
இந்தத் தொடர்கதை
இனியும் நீடிக்கலாமா?
சிந்திப்போமாக!

உ

சுபீக்ஷமஸ்து

நம் நாடு சுதந்திரமடைந்த பின்னர் தோன்றிய நச்சுக்காளானான "சந்தர்ப்பவாதக் கலாசார"ப் பயிர் பரவிய வேகத்தைகண்டு அதன் பயங்கரப் பின்விளைவுகளைக் கணித்து வெகுவாய் அஞ்சி அநேக வருடக் கவலையின் விளைவாய் தோன்றிய இந்நூதனத் தோத்திரத்திரட்டினை பரிவுடன் பிரசாரம் செய்து நமது பாரதத்தில் பரப்புவதற்கு முன்வந்த

ஆன்மீகப் பெரியார்

அந்த நல்லூர்

ஸ்ரீ வித்யா மஹாஸௌபாக்ய பராம்பிகா பீடாதிபதி

தவத்திரு **ப்ரணவானந்த ஸ்வாமிகள்**

கருணைக்கு மிகவும் கடமைப்பட்டவனாகி யுள்ளேன். இத்தோத்திரத்தால் ஒவ்வொரு வீட்டிலும் தனித்தனி யாகவோ கூட்டாகவோ வழிபடலாம். இளைஞர்கள் ஸத்ஸங்கம் (அறப்பாசறை) அமைத்து கூட்டு வழிபாடுகள் நடத்தலாம். இதனை பயன்படுத்த எவருக்கும் உரிமையுண்டு.

அன்பே சிவம்

த்ரிசக்தி பாததூளி **T.V. கல்யாண்**

அகண்ட பாரத தேவி கட்க மாலா மண்டலி

(இவண் தமிழில் உள்ள தோத்திரங்கள் ஒவ்வொரு பிராந்தியமொழியிலும் அடுத்தடுத்து வெளியாகும்)



ஆதரவு தேடி அண்டி வரும்
ஆஸ்திக கோடிகளை
அரவணைத்து
பதினாறு இலக்குமிகளின்
பரிவுப் பார்வை வீசப்போகும்
புண்ணிய க்ஷேத்ரமாக



ஷோடசலக்ஷ்மீ ஆலயம்

வெகு விரைவிலேயே நிர்மாணிக்க
தவத்திரு **ப்ரணவானந்த ஸ்வாமிகள்**
முழு முயற்சியுடன் இடம் தேர்வு
செய்வதில் இறங்கியுள்ளார்கள்.

* *விபரந்தாங்கிய மறு அறிவிப்பை அண்மையில் எதிர் பார்க்கலாம்.*

S. சங்கர நாராயணன்
நிறுவனர்
ஸ்ரீ ராஜமாதங்கி ஸ்ரீ வித்யாபீடம் ட்ரஸ்ட்,
இந்திரா நகர், சென்னை – 20.
&
த்ரிசக்தி பாததூளி **T.V. கல்யாண்**
அகண்ட பாரத தேவி கட்க மாலா மண்டலி